உ

சிவமயம்.

தத்துவலிங்கந்துணை.

# மயிலாசலத்தந்தாதி

பொய்கைப்பாக்கம்

## சின்னையவுபாத்தியாயர்

செய்தது.

இஃது.

இவரதுகுமாரராகிய,

## பச்சையப்பவுபாத்தியாயரால்

தமதுமைத்துனர்.

செந்நீர்க்குப்பம் கிராமத்தாராகிய.

புதுவை.

## பெரியசாமிமுதலியார்

கேட்டுக்கொண்டபடி.

திருத்தணிகை.
விசாகப்பெருமாளையரது,
விவேகக்கல்விவிளக்கவச்சுக்கூடத்தில்.

பிலவ௵ தை௴

பதிப்பிக்கப்பட்டது.

இதன்விலை- அணா, ௪.

உ

சுத்தலிங்கந் துணை.

வேலுமயிலுந் துணை.

# மயிலாசலத்தந்தாதி.

## காப்பு.

கட்டளைக்கலித்துறை.

வெயிலவனைக்கந்தப் பூங்கரத்தாற்பற்றி வெம்பணியி ற்
மயிலவனைக்கந்த மாகப்புனையும் மகட்டுப்ப ரோ
மயிலவனைக்கந்த ரனேர்குழல் வள்ளி மணம்புரிபவா ர்
மயிலவனைக்கந்த ரந்தாதியான் சொல்ல வந்தரு ளே.

---

சீர்தந்தவாரிசப் பொன்னூர்ந்தவரைவுந் திகழுமுத்தர் *
நேர்தந்தவாணியும் மாதுமயிலாசல நேயக்கந்த *
னேர்தந்தவாரி சயப்பெறுவள்ளிதெய் வானையரி *
போர்தந்தவானைக் கிளையோனென்புந்தியி லுள்ளவனே. (க)

உள்ளத்திரிபானுந் தவ் பரவேசெலுத்திடும் யோகர்சிந்தர் *
வெள்ளத்திரியானவன்டர் குழுமயில விலங்கற்கந்தன் *
மெள்ளத்திரியான வெழிலிவள்ளிகேள்வன் மறுநரகப் *
பள்ளத்திரியானமுந் தாமலெட்போதும் புரிப்பவனே. (உ)

பவளவனைக்கனி நல்குன்றசெம்மேனிப் பசுமர்புற்றேல் *
வளவனைக்கனி வோர்சேயர்சேவற் றுவசத்திறைர் *
திவளவனைக்கனின் முத்தார்மயிலச் சிலம்பகத்தே *
யிவளவனைக்கணிற் கண்டாள்கலைசங் கிழந்தனளே. (ங)

தனதாகநாவென்று லோபிகன்மீதிற் றடமுறைத்துக் *
கனதாகநான்மரு வாதான்மருங்கு கவினிமையிற் *
சினதாகநாகந் தனமாகமோகஞ் செழித்தவள்ளி *
மனதாகநாடு முருகாமயில விலங்கலனே. (ச)

விலங்கலனந்தம் புனைமயில விலங்கற்கந்தன் *
பொலங்கலனந்தம் பொலியன்பிரண்டு புயன்கடம்ப *
வலங்கலனந்தம் பகைபாவமச்ச மகற்றிநெஞ்சே *
கலங்கலனந்தந் தவிப்பான் கழியும்... வே. (ரு)

கனகசிகர சினகரஞ்சேர்கவி னூர்மயில *
நனகசிகரமொ ராறுனைகந்தரு முகரஞ்ச *
மினகசிகர வசுரசங்காரமெய்ஞ் ஞானமரு *
ரனகசிகர வுவரிநஞ்சுண்ட வரன்குருவே. (௬)

குருமந்தன்புத்தி ரபோனலரி குசன்பணிங்கும் *
பொருமந்தகனும் புலியு ரவும்வெம் பூதங்களுந் *
தருமந்தரவின்மை யுனதருளுண்டெனிற் றண்கடம்பு *
மருமந்தவிலணி கந்தாமயில வரையரசே. (௭)

அரவலர்வேணியன் சேயன்மயில வசலந்தனிற் *
குரவலர்கூந்தலெற் கென்கூறிச்சென் றனள் கூறிலாய் *
புரவலர்நீங்கப் புரட்போரிலாமற் புலியைச்சுற்று *
மிரவலர்போல விருவிழியைச்சுற்று மிரங்கிளியே. (௮)

இளமுருகாவயில் வீராவெப்போது மியமுழங்க *
வளமுருகார்மயி லாசலவாச மருவுபரி *
மாளமுருகாரணி யத்தூரவம்புணர் வாகவென்றே *
யுளமுருகார்பிற விக்கொருகாலு மொழிவில்லையே. (௯)

வாகனமானன கண்ணுவமக்கின்ப மிசையவருள் *
பாகனமானவருள் சேண்மயிலாசலப் பண்ணவனன் *
பாதனமானங் கெடவருநல்குர வத்தனையும் *
வாகனமான மயிலேசொல்வாய்மணி வாய்திறந்தே. (௰)

சிறத்தத்தைசேபனற் பாகன்மருகன் செருக்கடைந்தே *
யறத்தத்தைநீக்கு மசுரகுலாந்தக னென்பர்கடென்று *
மறத்தத்தைமாற்ற மயிலாசலந்தனில் வாழுங்கந்தன் *
குறத்தத்தைமைந்தனங் கொடும்பெருந்தனக் கோட்டகனே. (௰௧)

கோட்டானைச்சூரனை வென்றேல்வயங்கொரு கூன்பிறைநேர்
கோட்டானைசூர்க்கினை யோனயில்வீரன் குகன்மயிலக் *
கோட்டானைசுரம்பர்க் கொட்டாதவனருள் கூடலர்நேர் *
கோட்டானைசுரனைப் போமெய்யெற்கார்வசை கூர்பகையே. (௰௨)

கூரணிமான வயிரோலிமயிலக் குவட்டிடையிற்றோய் - ※
வாரணிமான கிளைமீதுவல்லியு மாமணிகள் - - ※
தாரணிமான மகிழ்முகவேர்வையுந் தங்கடியுந் - - ※
தாரணியானறி யென்றுட்விழிகளுந் தாமிமைத்தே. (௰௩)

தாம்பரவத்திர மோர்கோடிபாதவர் தாமன்னமே - - ※
தாமபரவத்திர முகந்தகிலைகொண்ட சங்கரனார் - - ※
தாம்பரவத்திர மாமிமயிலச் சயிலத்தின்மீ - - ※
தாம்பரவத்திர மாறுடன்முன்றுஞ் சரவணனே. (௰௪)

சரவணலோசன வள்ளிவலியக் தழுவிடக்குஞ் - ※
சரவணல்செய்யக் குழைந்தெழும்வாகன் றருமைந்தனென்று ※
சரவணம்பாக மயிலாசலத்தினிற் றங்குகந்தன் - - ※
சரவணப்பொய்கையில் வந்துதித்தானெனிற் சத்தியனே. ௰௫

சத்தியத்தன்மைய லற்றமெய்ஞ்ஞானியர் தாமுணருஞ் - ※
சத்தியத்தம்மயி லாசலவாசன் சமரிலெழுந் - ※
சத்தியத்தன்னசு ரர்குலமானச் சயம்படைத்த - ※
சத்தியத்தப்புக மென்வல்வினையைத் தடிந்தனனே. (௰௬)

தடித்துங்களையெனு மின்னிடைவள்ளி தனவனாக ※
விடித்துங்களைபெறும வாகன்மயிலவெற் பெற்றையுன்னீர் ※
குடித்துங்களைநடித் துந்தப்போமாறிய மோதமோ ※
படித்துங்களைநயல் லொண்டெகுமப்பொழு தார்துணையே. [(௰௭)

ஆரவணைக்கும் பனுக்குமுடற்கரித் தோல்கரித்தோல் - ※
ஆரவணைக்குமுடையுற் றுலணிந்தவுககு மாரியனார் - - ※
ஆரவணைக்கும பிடார்மனனைவினை யத்தனையும் - - ※
ஆரவணைக்கும பரமர்மயிலவெற் பார்வணங்கே. (௰௮)

வணங்கடியார்த மனத்தாமரையின் மருவமகிழ்ந் - ※
திணங்கடியார்மயி லாசலவேலனை யேத்தல்செயாக் - ※
குணங்கடியார்புனை மாகணைந்தியங் கொடுவரியாக - ※
கணங்கடியார்வனை நீறங்கண்ணறீது சருகுமன்மை. (௰௯)

கருத்தனங் கன்மத்தை மாற்றுங் குகன்வள்ளி காணவந்த
விருத்தனங் கல்மகிழ் வெய்துமயில வியங்கன்மின்னே
திருத்தனங் களிமனை மாகாதருளச்சித் தித்திடுவீ
குருத்தனங் கண்ணெதிர்த் தென்மேற்செய்யாம லுயித்தியபோ.
(௨௰)

உயித்திரிய ராவின் றசைபூண றவொடு மோம்புகின்ற
மயித்திரிய ராவி யனல்போற்சுடுந்தொழிற் பாவியராந்
தயித்திரிய ராவி தனைவாங்கும் வேலவொன் றலவிகைக்கு
வயித்திரிய ராவி வரைஞ்சேர்மயிலக்கு வட்டணையே. (௨௧)

வடம்பணிபூண்ட மகாதேவர்மைந்தன் வியங்குமிசம்பொழ்
குடம்பணிகொங்கைக் குறவள்ளிகாந்தன் கொதித்துமனத்
திடம்பணிவந்த வசுரசங்காரன் செழித்தமலர்க்
கடம்பணிமார்பன் மயிலாசலத்துறை காங்கயனே. (௨௨)

காங்கையனெம்மை திருமுலைப்பாலுண்ட கார்ப்பணிரு
பூங்கையனெம்மை யடியார்க்குருமற் புரக்கும்வள்ள
லீங்கையனம்மைப் புரப்பான்மயில நெடுவரைய
ஞேங்கையனம்மை யலக்கலவோம்புக லும்பண்டனே. (௨௩)

பண்டாலங்கரிய வயில்மேருல்கதன்புற் பறியினிலான்
பெண்டாலங்காய தளித்திடப்பாடிய பிள்ளைதிசை
யொண்டாலங்காயம் புகழ்மயிலாசலத் தோர்குகனைக்
கண்டாலங்காயத் துயர்நீங்குஞானமெய்க் கண்வருமே. (௨௪)

கண்ணுறுமாறுங் கயல்சார்வபதுங் கமலநறுங்
கண்ணுறுமாறுங் கவின்செய்மயில்வரைக் கண்டுமனக்
கண்ணுறுமாறு துயர்சிந்தித்தேத்துமின் காருணியக்
கண்ணுறுமாறு முகமாறுளவள்ளல் காத்திடுமே. (௨௫)

காவலராயுல காளவுமிக்க கலைபுணர்வின்
மாவலராயுள ராகவும்வேண்டில் வயங்குகொடிச்
சேவலராயுதம் வேலார்மயிலச் சிலம்பிற்கந்தர்
பூவலராயும் பதத்தைவணங்கும் பொயிலன்பரோ. (௨௬)

பொயிராவணவின்று போய்நாளைவாசண்டை போடவென்ற
மெயிராவணன்மரு காவிரைங்கும்பிரண் டாயிரங்கோட *
டயிராவணன்றனை யாமயிலாசலத் தாருங்கந்தா - - *
செயிராவணமெனுந்தன் வல்வினையோடத் திருவருளே. (உஎ)

திருக்குரவன லணையார்க்கரியன் றிகழ்பனிரு - - *
திருக்குரவன லடியார்க்கினியன் சிகிதுரங்கன் - - *
திருக்குரவன மயிலாசலத்தினிற் செங்கமலத் - - *
திருக்குரவன மனையாடன்மீதன்பு செய்திலனே. (உஅ)

செய்வளையாரஞ் சொரிமயிலாசலத் தேவைத்தொழு - *
மெய்வளையாரவ னன்பர்க்குதவி விரும்பிச்செயார் - - *
பெய்வளையார்தமக் கீந்திடத்தேடிப் பெருந்தனத்தைப் *
பைவளையாரச் சுருக்கிடபிக்கட்டிவைப் பாரகத்தே. (உகூ)

பாரங்கரம்பெறும் வேலோன்மயினகப் பாடினிகேள் - *
வீரங்கரந்தரும் வேங்கையும்பஃறியும் வெங்களிறுங் - *
கோரங்கரமத் திரிமேடமாகுமுன் கொற்றவற்கு - - *
வாரங்கரந்தபி னெங்கையுமயானுமென் வையகத்தே. (௩௰)

வையங்கதிர்மிகும் வேலோன்மெய்யன்பர்க்கு வாழ்வுபெற *
வையங்கதிதருஞ் செவ்வேண்மயில வரையினிற்பார் - *
வையங்கதிகஞ்செய் வாம்பரிபூட்டி வலவனுந்த - *
வையங்கதிபுடன் மானேனமறுகில் வருகின்றதே. (௩௧)

வரும்பருந்தும்பொன் மழைசார்மயில வரைமுருகன் - *
கரும்பருந்துங்கொடி யுஞ்சுழல்வேலன் களித்துச்செந்தேன்
சுரும்பருந்துங்கடம் பார்புயனீடிய தொல்வினையாற் - *
றிரும்பருந்துன்பந் தனைமாற்றுவானந் திருக்கரமே. (௩௨)

திருக்குமரன்கயி லாயச்சிலம்பிற் செழிப்புடனே - *
யிருக்குமரன்குரு வாமேருண்மயில வெழில்வரையிற் - *
றருக்குமரன்பொரு சங்கரனென்றெனைத் தாழமடற் - *
கருக்குமரன்பரி நானேறிவந்துன்னைக் காண்பனின்றே. (௩௩)

நின்றவன்மாவிரு கூறாய்க்கிழிந்திட நீடயிலாற் - - *
கொன்றவன்மாமயி லாசலநாடிக் குறியுடனே - - *
சென்றவன்மாசகல் சீறடிபோற்றிவெந் தீவினைதீர் - *
தின்றவன்மாகர் புகழப்பெறுவன் திளர்திருவே. - (௩௪)

திருக்கையஞ்சார்க்கிளை யோனருண்மன்னித் திகழ்பனிரு - *
திருக்கையஞ்சாரல் செழிக்குமயிலச் சிலம்பிலன்பர் - *
திருக்கையஞ்சார்சொல வுஞ்போலப்பொன்பெறச் சென்றனரோ
திருக்கையஞ்சாரலை யேய்கடலேந்தலை தேர்துரந்தே. (௩௫)

துரந்தலைவெல்லுங் கதிரோன்பரவுஞ் சுடர்வடிவன் - *
கரந்தலைபன்னிரண் டாறுள்ளவன்கவி னார்மயிலப் - - *
புரந்தலைமைப்பெறத் தங்கியகந்தன் பொல்லாவசுரும் - *
பரந்தலைவேலையுஞ் சிவனமாறப் பறித்தவனே. - (௩௬)

பறந்தந்தரந்த னிற்பக்கிகளாயும் பர்களைதன் - - *
மறந்தந்தவாழ்வுற நல்கியவேலன் மயிலவெற்பி - *
னிறந்தந்தவரம் பெறுமிருண்மாவின னேரமரிற் - *
புறந்தந்தவர்தனங் காவலர்க்காகும் புனக்கிளியே. (௩௭)

புனக்கவலைசெந் தினைமாவருந்தும் புளினர்வள்ளி - - *
தனக்கவலைபுருந் தேமயிலாசலந் தங்குகந்தா - *
சினக்கவலைசெய மேவுநமன்கையிற் சிக்குமொரு - *
மனக்கவலையெனை யண்டாதருள்செய வாகளித்தே. (௩௮)

வாகைக்குமரன் மயிலவரைக்கந்தன் வள்ளியெனுந் - *
தோகைக்குமர புரைதந்தோன்பதத்தைத் தொழாவம்பரோ *
யோகைக்குமர மெனவுதித்திருங்க ளைஞலர்ந்து - - *
சாகைக்குமரமும் போதெவருங்கணிற் சந்திப்பரோ. (௩௯)

சந்தவலம்புரித் தாரணிவேந்தன் றரங்கலங்கி - - *
நந்தவலம்புரி பூதிமருக நகமயிலக் - - - *
கந்தவலம்புரி காவிடுந்தூதர் கருணையற்று - - *
வந்தவலம்புரி போதிலென்கண்ணெதிர் வாசெழித்தே. (௪௰)

வானாடுதேவர் பெறத்தந்தகந்தன் மறவர்குல - *
மானாடுவேண்ட மணஞ்செய்தகந்தன் மதுவையுண்டு - *
தேனாடுதண்டலை சூழ்மயிலாசலஞ் சேர்ந்தகந்த - - *
ஞானாடுமின்னைத் தருவனெஞ்சேநன் னயப்பவரவே. (௪௧)

நரைமாத்திரையுடன் மாற்றியகந்த னளிர்மயில - *
வரைமாத்திரைகடல் சூழ்புவிவாஞ்சைகொள் வன்னெஞ்சர்கா
ரரைமாத்திரையள வேனுமுன்னீர்வைத் தியங்கலைவிட் *
டுரைமாத்திரையெனும் போதேவர் காப்பர்நும் மூனம்வென்
[றே.(௪௨)

வெஞ்சினங்காள மெனக்காழ்த்துமின்னி வெடித்துலவு *
மஞ்சினங்காள்கந்த வேள்சார்மயில வரையினிற்சங் - *
கஞ்சினங்காள முழங்கவென்றேர்வரல் காந்திகொள்செம் *
பஞ்சினங்காள மெனுமடிக்கோதும் பரசினனே. (௪௩)

சினத்தாசையெட்டுங் கலங்கப்பொருத திடவசுரன் - *
மனத்தாசைமாற்றிய வேலோன்மயில வரையன்பரூர் *
புனத்தாசையக்கரை யோசைக்கிரங்கந்திப் போதுகண்டுந் *
தனத்தாசைகொண்டென் றனத்தாசையைமறந் தார்செம்மை
[யே.(௪௪)

செஞ்சித்தவிக்குந் திறநினைந்தேசெருச் செய்யவுற்று .- *
வஞ்சித்தவிக்கு மசுரகம்வெந்திட வாகைகொண்டோர் *
தஞ்சித்தவிக்குகன் வாழுமயில சயிலம்புகீ - - *
ரஞ்சித்தவிக்கும் படிவரிலாருமக் கானவரோ. - (௪௫)

ஆனவரம்பை பலாமாவசோககி லார்வனமும் - - *
வானவரம்பை யருஞ்சூழ்மயில வரையகத்திற் - - *
கானவரம்பை நிகர்விழிவள்ளி கணவனுற்றான் - - *
ஞானவரம்பையன் பர்க்கீந்துநாற்கதி யைவெலவே. (௪௬)

வெலசந்துகளையுற வென்றேனுழவர்மின் னார்விழிநேர் - *
சலசங்களையும் வயல்சூழ்மயில சயிலமன்னீர் - - *.
வலசங்களைசெல் களத்தீர்விடத்தை மறைத்தமுத - *
கலசங்களைத்திறந் தீரெனக்கீந்துயிர் காத்திடவே. (௪௭)

காலனஞ்சம்பயி லன்னகன்னவள்ளி கணவன்கைம்முந் - *
நாலனஞ்சம்பயில் போமொன்றனுறை யமரில்வெல்லேறன் - *
சூலனஞ்சம்பயில் சொல்லருள்பாலன் றுலங்குகதிர் - *
வேலனஞ்சம்பயில் செய்குழமயில்வரை மெய்ப்பொருளே. (௪௮)

பொருவடிவேலன் குருந்தடியாலடிப் புண்ணியர்க்குங் - *
குருவடிவான பரமன்பரவுங் குருமுருகன் - - *
மருவடியார்தொழு மாமயிலாசலம் வாழ்குன்றன் - *
றிருவடியென்மனத் துன்னத்திருவருள் செய்தனனே. (௪௯)

செய்தற்கரையணங் காமரனேற்றிய சீர்ப்புலவன் - *
மெய்தற்கரையணங் காமரன்சேய்மயில் வெற்பகத்திற் - *
பொய்தற்கரையணங் காமரன்பாகிய பொன்னனையா - *
ணெய்தற்கரையணங் காமரனமன்ன நீர்மைடளே. (௫௰)

நீதகரையும்பர்க் காகவெஞ்சூரை நெடுங்கிரியை - *
மாதகரைவெலும் வீரமயில வரைமுருகா - - *
பாதகரையுன தன்பர்க்களிப்பவர் பாற்றொசாலுந்துர்ப் - *
போதகரையு மடக்கிடற்றினர் புலம்பறுமே. - (௫௧)

புலம்பகராகிய தேவர்க்கருளைப் பொழியணிரு - - *
நலம்பகர்மேவு மயிலாசலந்தனி னுவலர்தே - - *
ரிலம்பகங்காமின் கவினலங்கூற வியற்பெயருர் - *
குலம்பகவொன்றுவந் தாரொண்ணம்பாதெனக் கூறுவதே. (௫௨)

கூறவிரும்பலை நெஞ்சேமயிலக் குகனையயர் - - *
மாறவிரும்பலைப் போனமன்றுதர் வருஞ்செயலைத் - *
தேறவிரும்பலைக் கிட்டிப்புலன்பொறி சீத்துவிக்கிக் - *
காறவிரும்பலை மேவிடும்போதென் கருதுவதே. (௫௩)

கரும்பாலையாருங் கவின்மயிலத்தன்பர் கண்டுதொழ - *
விரும்பாலையாமெதன்னன் வெப்பறதணித்த விதமென்னவே *
யரும்பாலையாஞ்சுச லெவுமணைமதனித்தரு ளாயிழைக்கியான் *
றரும்பாலையாவலி னுண்டதொப்பாயின்பந் தாவ்பெறவே. ௫௪

பெரும்படிதன்னிற் றனையேவணங்கிநிற் பேறனைத்தும் - *
விரும்படியார்க்கருள் வேணமயிலாசல மேவலர்போற் - *
பொருப்படிவந்த புலியடியிவ்வடி போருக்கந்தங் - - *
கரும்படியிவ்வடி காளையடியிக் கடிவடியே. - (௫௫)

அடியவனையுவந் தாளுங்கடவுளம் பொற்சிகர - *
நெடியவனையெறு மேட்டிலிற்பாரத நீர்சுதையை - *
முடியவனாதந்தி பின்னேன்மயில முருகன்புலக் - *
கொடியவனாவர் கனைவெம்பிறவர்க்குக் குணமருந்தே. (௫௬)

மருவண்டறுத கடம்பன்மயில வளாமுருகன் - - *
றருவண்டர்வாடத் தருமங்கலங்கத் தவப்பொருவப் - *
பொருவண்டரான வசுரசங்காரன் பொதியமுனி - - *
குருவண்டரில்லில் வளர்ந்தோன்மருகன் குகன்முதலே. (௫௭)

முகனறுசர்வாழச் சரவணந்தன்னின் முளைத்தெழுகின் - *
சுதனறுகப்பாலுண்ட தொல்லோன்மயிலச் சுடர்வரைமே - *
லிதனறுசீசமன் றுவுபேற்போற்றறை யேதுகலை - *
மதனறுகமீங்கில்லை யீசனைச்சேடகில்லவன் மந்திசொல்வனே. (௫௮)

மஞ்சங்கவலை வளர்ந்சேர்மயில வரைக்குகன்றாட் - *
கஞ்சங்கவலை நிகர்மாயைதீர்த்த கருத்தன்னைமேல - - *
யஞ்சங்கவலை கடமேலழ்கலங்கிறு மஞ்சலிலா - - *
நெஞ்சங்கவலை புறுமாறெனக்குனா நீத்தளிந்தே. (௫௯)

நீருங்களையுத வாருந்தரித்த நிமலன்மைந்தன் - *
றேருங்களைகெடச் சீரார்மயிலச் சிலம்பன்கண்டார் - *
வாருங்களம்புலன் மாறுவந்தகன் வாதைசெய்போ - *
தாருங்களைப்புரப் பார்பணிவீர்மை யலைமறந்தே. (௬௰)

மறவஞ்சிகொங்கை வரைதாக்கும்பன்னிரு வாகுதொறு - *
நறவஞ்சிதறுங் கடம்பன்மயில நகத்தினன்பா - *
துறவஞ்சிடாத்தவ ரும்பர்மயங்கித் தொடருமெழி [(௬௧)
னிறவஞ்சிலோதியைக் கண்டேன்கண்டேனென் னிலையுண்டதே.

நிலவலர்சூடுஞ் சடையானருள்சுத னீபஞ்செச்சை - ※
நலவலர்சேர்புயச் செவ்வேண்மயில நகத்தகத்தே - ※
சொலவலர்காமத் துயரால்வருந்துமென் றோகையஞ்சச் ※
சலவலர்தூற்றவு மேவலர்காவலர் தன்மைநன்றே. (௬௨)

நன்றியனந்தம் பரிவுடனன்பர்க்கு நல்கும்வள்ளல் - ※
பன்றியனந்தம் பதஞ்சிரந்தேடப் பருப்பதமாத் - ※
துன்றியனந்தம் பலகடந்தோன்சுதன் சூரைவென்ற - ※
வென்றியனந்தம் பரன்மயிலாசல மேற்றிரனே. (௬௩)

திரம்போகமருந் துயரோகவும்பர்க்குச் செய்தகந்தன் - ※
நிரம்போகமருந்துங் கார்சூழ்மயில நெடுவரையின் - ※
வரம்போகமருந்தும் பாலையென்றோர்கிலன் மன்னவன்பின் ※
சுரம்போகமருந்து தாயேயென்றாள்சொற் றுலங்கியதே. (௬௪)

துலங்காதவரந் தரவாணரஞ்சத் துயர்செயுஞ்சூர் - ※
நலங்காதவரம் பொருவேலெறிகந்த னன்செய்வினை - ※
நிலங்காதவர்மிகுந் தென்மயிலாசல நிற்பனெஞ்சே - ※
கலங்காதவரந் தருவான்றுதிசெய்து காணிரந்தே. (௬௫)

இரவலராகி யிடுவாரகஞ்சென் றிரங்கிநின்றோர் - ※
புரவலராயிப் புவியாண்டுவாழ்வு பொருந்தவரந் - - ※
தரவலராரணம் போற்றுமயில சயிலத்தினர் - ※
குரவலராருங் குழல்வள்ளிகேள்வர் குறையொழித்தே. (௬௬)

ஒழியென்பரிவை யுனைநம்பினேனுக் குதவிசெய்யா - ※
வழியென்பரிவைச் செயலுன்னியன்முன் வயன்மயிலை - ※
யுழியென்பரிவை யுருவாகச்செய்த துனைதுகவின் - ※
மொழியென்பரிவை பொய்யோமயிலாசல முன்னவனே. (௬௭)

முன்பந்தனைத விலாஞானவீட்டின் முயங்குஞ்சுக - ※
வின்பந்தனையன்பர்க் கீவான்மயிலவெற் பின்மன்னனே - ※
மென்பந்தனைய விரன்முலைமின்னிடை மெல்லியலா - ※
மென்பந்தனையைச் செழிப்புடனேவந் தினிவனாயே. (௬௮)

வளைவிலரிவையம் பாகட்புரமட் டவன்புதல்வன் - *
வளைவிலரிவையம் வாழ்த்துமயில வளையன்பனூர் - - *
வளைவிலரிவையன் பாகசெட்பாண வரின்மூறியில் - *
வளைவிலரிவை யடியென்பம்போமூன் மகத்துவமே. (௬௯)

மகந்தக்கன்செய்ய வழித்தோன்மதலையை மாமயில - *
நகந்தங்கதென்று குடிகொண்டகந்தனை நன்மைமிகுஞ் *
சுகந்தக்கடம்பனை நெஞ்சேதுதிசெயிற் றாயமனத் - *
துகந்தக்கவைம்வினை தீர்த்தளிப்பான்மகிழ்ந் தோங்கருளே.
[(௭௰)

அருவாயசம்பரி தேடும்பொருட்பொரு ளண்டரஞ்சப் - *
பொருவாயசம்பரி கொண்டோன்மயிலப் பொருப்பகத்தே*
வெருவாயசம்பரி வில்லாமற்சென்றவென் மின்னிலைமை *
கருவாயசம்பரி வாகப்புகறி கவின்செழித்தே. - (௭௧)

செங்குவளையலர் வாவித்தணிகைநற் சென்னிவரை - *
கொங்குவளையும் பாடணிபரங்குன்றங் கூடல்தென்பாற் - *
பொங்குவளைகடற் செந்தின்மயிலப் பொருப்பிகலுஞ் - *
சங்குவளைவள்ளி கைக்கிட்டசெட்டிதன் றாவிதுவே. (௭௨)

வேடவனிதை மகவானருட்டெய்வ வேழம்புண - - *
ராடவனிதை யமதிற்றனைநினை யன்பர்க்குநன் - - *
றாடவனிதை யனல்குமயில நகன்புகழைப் - - - *
பாடவனிதைநெஞ் சேதருவானுன் பகைமலைந்தே. (௭௩)

மலையாற்றலைமிகும் வேலன்மயில வளையண்ணலே - *
யிலையாற்றலைமை பெறுமூன்றுணைவி யிருகரத்தாற் - *
கலையாற்றலையுணர் வீணைக்கிசைசுளைக் காயுடைத்து - *
சிலையாற்றலையுடை யென்றுண்முன்வேதன் றிருவருளே.(௭௪)

திருத்துடையார்புனை வார்மயிலேசெழும் பூந்தருக்க - *
விருத்துடையார்பணி வேள்வாழ்மயில வெழில்வளைவா - *
யுருத்துடையார்வன்மை செய்திடமானமுயர்ந்தகுணக் *
கருத்துடையார்மனம் போலவெதும்புங் கடுஞ்சுரத்தே.௭௫

சுரதத்துவகைசெய் மாணூர்கலவித் தொடரினுறுந் - *
திரதத்துவர மயங்குநெஞ்சேதுதி செய்புரப்பான் - *
சரதத்துவமை யிலான்மயிலாசலந் தங்குகந்தன் - *
பரதத்துவமுத லென்றோதும்வேதம் பலசங்கமே. (எசு)

சங்கங்கலங்கலை சார்கடல்சூழ்புவி தன்னிற்பிறந் - *
திங்கங்கலங்கலை போலேயுழன்றுழன் றெப்பொழுதுந் - *
தங்கங்கலங்கலை தேடுநெஞ்சேமயி லாசலஞ்சா - *
ரங்கங்கலங்கலை கந்தன்செய்வானரு ளானந்தமே. (எஎ)

ஆனந்தமான பரியாநடத்து மரன்கயிலை - - *
யானந்தமானதி சூடுஞ்சடைய னருளியசே - - *
யானந்தமான நிலைகலங்காம லனுதினமு - - *
மானந்தமான சுகந்தாமயிலவெற் பான்றவனே (எஅ)

ஆன்றமைசார்மயி லாசலவேல னருளைத்தந - - *
லின்றமையான வெனைவெறுத்தேந்தல்பின் னேயிருகண் - *
கான்றமைநீரன்றி நீர்வேறிலாத கடுஞ்சுரத்தே - *
மூன்றமையீர்மகள் சென்றாள்கண்டீர்கொன் மொழிந்திடுமே.
[(எகூ)

மொழிவன்னியன்ன நடையுமைகங்கை முதிரும்பொன்னி *
தழிவன்னிசூடி தனையன்முன்மாவெலி தன்மகத்தி - *
லழிவன்னியாகி யிரந்தான்மருக னுணர்மதியே - *
பொழிவன்னியாரு மயிலான்மயிலப் பொருப்படைந்தே.(அய)

அடையைவளாயவர் தேவியைக்காத்த வரிமருக - *
னுடையைவளையயி லேலெயன்றவன்மயி லோங்கன்மன்னு - *
விடையைவளாயன தோளைவளையினு மேந்திழையா - *
ளடையவளாய வருமோவகையை நவில்வளாந்தே. (அக)

வளையளாயன்செய்த மாதவத்தாலங்கு வந்துதித்த - *
பளையளாயன்பெற்ற கந்தன்மயிலப் பருப்பதத்திற் - *
றளையளாயன்புட னுள்வந்தான்பெயர் தன்னைநெஞ்சே - *
யுளையளாயன்றுடன் றேன்றும்வினையற வுன்னிருந்தே.(அஉ)

இருக்கந்தகாவி னெழின்மயிலாசலத் திட்டமிருந் - *
திருக்கந்தகாவினை தீமொனநல்லருள் செய்தனன்காண் - *
தருக்கந்தகாவினி யுன்னதிகாரந் தனைநினைந்து - *
செருக்கந்தகாவிளை யாட்டல்லவென்மொழி தேர்வெய்யனே.
[(அங)

வெயில்வாகனத்தன் றனையன்பனிரண்டு மேருவினை - *
குயில்வாகனத்தன் மருகன்மயிலக் குகனருளை - - *
யயில்வாகனத்தனந் தீவினைக்கட்டறுத் தாரநெஞ்சே - *
மயில்வாகனத்தன் முதல்வானவருக்கும் வானவனே. (அச)

வானந்தியானயன் கங்கொண்டவத்தன் வரைதருஞ்சி - *
வானந்தியாகன் மதலாய்மயில வரைமுருகா - - *
வானந்தியாலம் வளிபாருடலின் மயங்குமக்கால் - *
வானந்தியான முனைமறவாமன் மதிநண்ணவே. (அரு)

நண்ணியம்பாவந் தனிலெடுத்தெய்மத னன்செயலாற் - *
புண்ணியம்பாவ நிகர்விழியாரைப் புணர்ந்துதுதி - *
பண்ணியம்பாவனை செய்யிலுண்டாகும் பயன்கொடிதென் *
றெண்ணியம்பாவ லுடன்மயிலக்குக னேர்கருத்தே. (அசு)

கருத்தேவிதனந் தவிர்மயிலாசலன் கண்ணுதலி - *
னுருத்தேவிதனந் தமக்கருள்வானொளிர் தாளையுன்பா - *
விருத்தேவிதன மிரந்தோர்களுக்கிசை வள்ளியெனுந் - *
திருத்தேவிதனங் குழையத்தழுவுந் திருக்கரனே. - (அஎ)

கராசலமூல மெனுமோசைகேட்டக் கணத்தில்வந்து - *
கராசலந்தீர வதைத்தோன்மருக கவின்மயிற்சி - - *
கராசலங்கூறு மவுணசங்காரகு காபன்னிரு - - *
கராசலமீன்ற தனையாகுறவள்ளி காதலனே. - (அஅ)

காரனருண விழைபுலகேத்துங் கவிகள்சொன்னார் - *
வீரனருண மருகன்மயிலச்செவ் வேண்மகிழக் - - *.
கீரனருண கிரியென்புன்சொற்கவி கேட்குங்கொலோ - *
பாரனருணன் குடையான்றன்சித்தமென் பாக்கியமே. (அகூ)

பார்வனம்பாவகன் கால்வெளியிந்து பரிதியனு - *
வோர்வனம்பாவக மாகும்பரத்தி னுதித்தபொருள் - *
சீர்வனம்பாவகஞ் சேருமயிலச் சிலம்பன்களி - *
கூர்வனம்பாவக னேயென்சொல்வேனுன் குணத்தினையே. ௯௰

குணக்கதிகாரன் பரவுமயிலக் குவட்டிற்கந்தன் - *
குணக்கதிதானற் றவர்க்கருள்வோன்பதங் கூடல்செய்யாய் *
குணக்கதிமாரன்செய் போரின்மின்னுருடன் கூடினையுன் *
குணக்கதியார்செம்மை செய்வார்நெஞ்சேசொல் குறிதெரிந்தே
[(௯௧)

தென்னவன்பாரிற் றிருநீறிடச்செய்த சேய்மயில - *
முன்னவன்பாத மலரையுன்னுர்த முரண்மனமுங் - *
கன்னவன்பான கசடர்க்குமிக்கநற் கல்விவரச் - - *
சொன்னவன்பாவமும் போலேயிருக்குமிச் சூழிருளே. (௯௨)

இருளுந்துறக்கமும் போய்வரநல்கு மிருவினையு - *
மருளுந்துறக்கம் விழிப்பதுபோன்மர ணம்பிறப்புந் - *
தெருளுந்துறக்கச் சிவஞானதேசிகன் சீருருவா - *
யருளுந்துறக்க மயிலாசலக்குக னன்புறவே. - (௯௩)

அன்பரவையினைப் போற்றியசுந்தரர்க் காகச்சந்து - *
முன்பரவையிற்சென் றோன்சேய்மயில முருகன்வெற்பின் *
மின்பரவைதிக ழாழியுன்மார்புற மேவிமகிழ் - *
பொன்பரவையுனை யென்றடைந்தாள்கொல் புகலெனக்கே. ௯௪

புகழப்பணியக் கருதவினிய புனிதகொன்றை - *
திகழப்பணியரன் மைந்தவருத்துமென் றீவினைவே - *
ரகழப்பணியுன் பதம்பணியாப்பொ லசுராவின்றே - *
ரிகழப்பணிய வயிலாமயில்வெற் பெழிற்கந்தனே. (௯௫)

எழுதவரிய வெழில்வள்ளிகேள்வ னிருநிலத்தை - *
யுழுதவரியின் மருகன்மயிலவெற் புற்றுவந்து - - *
முழுதவரிசை தனையோதிவாழ்த்தி முறைமையுடன் - *
றொழுதவரிய லதனையெப்போதுந் துதிசெய்வனே. (௯௬)

செயக்கந்தன்மேவச் செழிக்குமயிலச் சிலம்பமொன்றன் - *
முயக்கந்தவிர்ந்தொரு சூளையைச்சேர்ந்த முறைமையெண்ணி
னயக்கந்தம்வீசு நளினமலரி னறவைவிட்டு - - *
மயக்கந்தரும்பனங் கள்ளையருந்திடும் வண்டொத்ததே. (௯௭)

வண்டாருஞ்செச்சை மாலருங்குரவும் வனக்கடம்பின் - *
றண்டாருஞ்சாரும் புயன்மயில்வெற்பன் சவரிவிற் *
பெண்டாருமென்று மணந்தோன்றனதன்பர் பேரவையைக் *
கண்டாருங்கண்டவர் தாளைக்கண்டாருங் கடவுளரே. (௯௮)

கடவிகடதட மாவுக்கிளவல் கவினுறையு - - *
மடவிகடதடஞ் சூழுமயில் வசலமின்னே - - *
மடவிகடதட மஞ்சேலணித்தென் வளநகரும் - - *
புடவிகடதட வாவுமாமீதிற் பொறைமிகவே. - (௯௯)

மிகத்தானவர்செய்த மாயையைவென்றசெவ் வேள்திகழ்சண் *
முகத்தானவுருட னேரிலக்கர்க்குமுன் னேன்மயில - *
நகத்தானவமுயர் வேதாந்தகாரண னற்குமரன் - *
மகத்தானவர்மனத் தாமரைநாடி வரும்பரனே. - (௱)

வரும்பத்தரையங்கை மாவுக்கிளவல் மயிலவெற்பன் - *
விரும்பத்தரையும் வணங்கச்செய்தேசிகன் மெய்யன்புள்ள *
பெரும்பத்தரைத்தன் றிருவடியைப்பிரி யாத்தவரைத் - *
திரும்பத்தரையிற் பிறவாதளிப்பனற் சீரருளே. - (௱௧)

மயிலாசலத்தந்தாதி.

முற்றுப்பெற்றது.

இச்செயுள்.

இந்நூலாசிரியருடைய-புதல்வராகிய,

பச்சையப்பவுபாத்தியாயரால் சொல்லப்பட்டது.

கட்டளைக்கலித்துறை.

தெய்வப்புலமைத் திருவள்ளுவர்மறை சேர்ந்துரைத்த
மெய்ம்மைப்பொருளுணர் மேதாவியன்பிளிர் மாமயில
சையத்தினன்குகன் மீதிலந்தாதித் தமிழுரைத்தான்
செய்முத்தமிழ்ப்பொய்கைப் பாகையன்சின்னைய தேசிகனே.

இச்செய்யுள்.

இந்நூலாசிரியருடைய-பேரராகிய,

சபாபதியுபாத்தியாயரால் சொல்லப்பட்டது.

கட்டளைக்கலித்துறை.

இன்பம்பொருந்தி யிருவினைக்கட்டறுத் திம்மையுமற
சன்மமுடிவிற் சமனணுகாவணருஞ் சார்வர்முத்தி
சின்மயபோதச் சிவகுருநாதற்குச் சின்னையன்சொற்
றென்மயிலாசலத் தந்தாதியிஞென்றைச் செப்பினமே.

§*§

இப்போது.

அச்சிற்பதிப்பித்துக்கொண்டுவருவன.

புதுவை, வேதபுரீசர் அந்தாதிமூலமும்-

திரோட்டியமுகசெந்திலந்தாதிமூலமும்-

அதன்

உரையும்.